பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 08 2024 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வெளிநாடுகளில் செயல்படும் இந்திய நிறுவனங்கள் பத்திரங்களை இந்திய சந்தைகளில் முதலீடு செய்வதற்கான திருத்தியமைக்கப்பட்ட நெறிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
2. ஐ என் எஸ் அரிகத் நீர்மூழ்கி போர்க்கப்பலை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் இன்று நாட்டுக்கு அர்ப்பணித்து வைக்கிறார்.
3. மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் பங்கேற்போரின் அடையாளத்தை ஆதார் அட்டையை பயன்படுத்தி சரிபார்க்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.
4. தமிழக மக்களுக்கு தரமான உணவை வழங்கும் வகையில் மாநில உணவு பாதுகாப்புத்துறை செயல்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.
5. ஆசிய கோப்பை சைக்கிளிங் போட்டியின் ஆடவர் **Keirin** பிரிவில் இந்தியாவின் **Ronaldo Singh Laitonjam** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<<<>>>>>**

தேசிய விளையாட்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

புகழ்பெற்ற ஹாக்கி வீரர் மேஜர் தியான்சந்த்-ஐ கௌரவிக்கும் வகையில் 2012-ம் ஆண்டு முதல் அவரது பிறந்த தினமான ஆகஸ்ட் 29-ம் தேதி நாடு முழுவதும் தேசிய விளையாட்டு தினமாக கொண்டாடப்படுகிறது.

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்தவும், இளைய தலைமுறையினரை விளையாட்டில் ஈடுபடுத்தும் நோக்கிலும் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், இளைஞர்கள் விளையாட்டுக்களில் பிரகாசிப்பதை உறுதி செய்யும் வகையில், மத்திய அரசு விளையாட்டுத் துறையை தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தியான்சந்த் விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள அவரது சிலைக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா மரியாதை செலுத்தினார்.

அனைவரும் விளையாட்டுக்களில் ஈடுபட்டு உடல் திறனுடன் திகழ வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், இந்திய வீரர்கள் பல்வேறு விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் வகையில், விளையாட்டுத்துறை மேம்படுத்தப்பட்டு வருவதாக திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

ஐ என் எஸ் அரிகத் நீர்மூழ்கி போர்க்கப்பலை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் இன்று நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

விசாகப்பட்டினம் துறைமுகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், நாட்டின் இரண்டாவது அணுசக்தி நீர்மூழ்கி கப்பலான ஐ என் எஸ் அரிகத் கடற்படையில் இணைக்கப்படுகிறது.

<<<<<<<>>>>>

நாட்டில் செயல்படும் பொதுத்துறை நிறுவனங்களில் வெளிநாடுகளிலிருந்து முதலீடுகளை நேரடியாக பங்குச்சந்தையில் முதலீடு செய்வதற்கு வசதியாக மத்திய நிதியமைச்சகம் பத்திர வெளியீடு ஒப்பந்த நெறிமுறைகளில் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

நிதியமைச்சகத்தின் அறிவிக்கையின்படி, உலக அளவில் செயல்படும் இந்திய புத்தொழில் நிறுவனங்கள் நேரடியாக சந்தைகளில் முதலீடு செய்ய முடியும்.

இந்த வசதி காரணமாக உலக அளவில் இந்திய சந்தையின் நிலை முன்னேறும் வாய்ப்பு உள்ளது.

தொழில்நுட்ப உற்பத்தி மற்றும் புதிய தொழில்களில் முதலீடு செய்யும் நிறுவனங்கள் தங்களது முதலீடுகளில் பத்து சதவீத பங்குகளை விற்பனை செய்வதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய அடுத்த மாதம் ஐந்தாம் தேதி கடைசி நாளாகும்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஆறாம் தேதி நடைபெறுகிறது.

மனுக்களை விலக்கிக் கொள்ள ஒன்பதாம் தேதி கடைசி நாளாகும்.

இரண்டாவது கட்டமாக அடுத்த மாதம் 25-ஆம் தேதி 26 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதனிடையே, முதல்கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 24 தொகுதிகளுக்கான வேட்புமனுக்களை விலக்கிக் கொள்ள நாளை கடைசி நாளாகும்.

முதல்கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 18-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

<<<<<<<>>>>>

மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் பங்கேற்போரின் அடையாளத்தை ஆதார் அட்டையை பயன்படுத்தி சரிபார்க்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், விண்ணப்பப்பதிவு, தேர்வுகள், பணியமர்த்தலின்போது இதனை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்ட்ராவில் குடிமைப்பணி தேர்வில் பூஜாகடேக்கர் முறைகேடு செய்ததாக எழுந்த குற்றச்சாட்டையடுத்து, இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் சிந்துதுர்க்கில், சத்ரபதி சிவாஜி சிலை சேதமடைந்தது தொடர்பாக, விசாரணை மேற்கொள்ள தொழில்நுட்ப கூட்டுக்குழு ஒன்றை நியமித்து, அம்மாநில முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, அம்மாநில முதலமைச்சர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கட்டடப் பொறியாளர்கள், நிபுணர்கள், இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரதிநிதிகள், கடற்படை அதிகாரிகள் இந்த குழுவில் இடம்பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

பிஜேபி மத்திய தேர்தல் பணிக்குழு கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக, பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டாவின் இல்லத்தில், இக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<<<<>>>>>

இலங்கையின் வடக்கு பகுதியில் இந்தியாவின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் மின் திட்டங்களுக்கான முதல்கட்ட நிதியை அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு சந்தோஷ் ஜா, அந்நாட்டு மின்துறை உயரதிகாரிகளிடம் வழங்கினார்.

இருநாடுகளுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த திட்டம் **Nainativu, Analaitivu** உள்ளிட்ட பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

இந்த திட்டம் பதினோரு மில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டில் இந்தியா சார்பில் செயல்படுத்தப்படுகிறது.

<<<<<<<>>>>>

தமிழக மக்களுக்கு தரமான உணவை வழங்கும் வகையில் மாநில உணவு பாதுகாப்புத்துறை செயல்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதுதொடர்பாக பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - மா. சு. – 52 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

குஜராத்தின் சௌராஷ்ட்ரா, கட்ச் பகுதிகளில் நாளை வரை அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், ராஜஸ்தான், மகாராஷ்ட்ரா, கோவா, கொங்கன் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

வங்கக்கடலின் மத்திய பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாகவும், இது அடுத்த 24 மணிநேரத்தில் தெற்கு ஒடிஷா மற்றும் வடக்கு ஆந்திர கடற்கரையோரப்பகுதியை நோக்கி நகரும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

திரிபுராவில் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில், மத்திய உள்துறை இணை செயலாளர் திரு பி சி ஜோஷி தலைமையிலான மத்திய குழு இன்று ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

திரிபுராவில் கடந்த வாரம் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக 31 உயிரிழந்துள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

369 நிவாரண முகாம்களில் 53 ஆயிரம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் அம்மாநில அரசு கூறியுள்ளது.

<<<<<<<>>>>>

பாகிஸ்தானிலிருந்து சட்டவிரோதமாக இந்தியாவை உளவு பார்ப்பதற்கு சில பயங்கரவாத அமைப்புகள் செயல்படுவதாக கிடைத்த தகவலையடுத்து, தேசிய புலனாய்வு முகமை பல இடங்களில் சோதனை மேற்கொண்டுவருகிறது.

கர்நாடகா, கேரளா, குஜராத், தெலங்கானா, உத்தரப்பிரதேசம் , பீகார் மற்றும் ஹரியானா மாநிலங்களின் 16 இடங்களில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக 22 செல்பேசிகள் மற்றும் அரசின் ரகசியங்கள் அடங்கிய ஏராளமான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், இந்திய கடற்படை தொடர்பான சில முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தேசிய பாதுகாப்பு முகமை தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை சைக்கிளிங் போட்டியில், ஆடவர் **Keirin** பிரிவில் இந்தியாவின் **Ronaldo Singh Laitonjam** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியில், மற்றொரு இந்திய வீரரான **Esow** ஐந்தாம் இடம் பிடித்தார்.

--------------

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில், ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – அர்ஜென்டினாவின் **Guido Andreozzi** இணை, நியூசிலாந்தின் டேனியல் - மெக்சிகோவின் **Rayes Varela** இணையை 5-7, 6-1, 7-6 என்ற செட் கணக்கில் தோற்கடித்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை, அமெரிக்காவின் **Seggerman – Prahac** இணையை 6-3, 6-4 என்ற செட் கணக்கில் தோற்கடித்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---------------------

பெருவில் நடைபெற்றுவரும் உலக இளையோர் தடகள சாம்பியன் போட்டியில், ஆடவர் 400 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் ஜெய்குமார் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

-----------------

ஆடவர் மூவாயிரம் மீட்டர் **Steplechase** போட்டியில் இந்தியாவின் ஷாருகான் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

மகளிர் வட்டு எறிதல் இறுதிப்போட்டியில் இந்தியாவின் அமானத் காமோஜ் பத்தாவது இடம் பிடித்தார்.

--------------

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் எஸ் எம் சுப்பிரமணியன் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<<END>>>>>**